# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register :
Sessions : SC.No.88/2015
Deposition of Witness for Prosecution PW- 10
Name :திரு.அம்பரீஷ்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 15th day of October 2019.

முதல் விசாரணை:-

நான் ஒசூர் எம்.ஜி. ரோடு சுண்ணாம்பு கார தெருவில் குடியிருக்கிறேன். சுண்ணாம்பு வியாபாரம்செய்கிறேன். மேலும் தெரிந்தவர்கள் கேட்டால் நகையை பெற்றுக்கொண்டு அதற்கு கடன் கொடுத்து வருகிறேன். 2013 ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு நாள் என்னிடம்வேலை பார்த்த ரவி செல்வம் என்பவரை அழைத்துக்கொண்டு வந்து அவருக்கு பணக் கஷ்டம் இருப்பதாகவும்அதனால் செல்வம் கொடுக்கும் நகையை அடமானமாக பெற்றுக்கொண்டு ரூபாய் 80 ஆயிரம் பணம்கொடுக்குமாறும் ஒரு வாரத்தில் திருப்பி கொடுத்து விடுவதாகவும்சொல்லி கேட்டார். அதன்பேரில் நானும் ரூபாய் 80 ஆயிரம் நகையை பெற்றுக்கொண்டு கொடுத்தேன். அது தங்க முறுக்கு செயின். மோதிரங்கள் இரண்டு ஆகியவற்றை பெற்றுக்கொண்டு நான் பணம் கொடுத்தேன். 13-2-2014 ல் போலிசார் வந்து நகை திருட்டு நகை என்றும் அதனைத்தான் நான் செல்வத்திடமிருந்து வாங்கியிருப்பதாகவும் கேட்டார்கள். அந்த சமயத்தில் போலிசாருடன் என்னிடம் நகை வைத்த எதிரி செல்வம் மற்றும் வி ஏ ஓ ஆகியோர் சகிதம் வந்திருந்தார்கள். பின்னர் எதிரி செல்வம் என்னிடம் கொடுத்துசென்ற நகையை எடுத்து போலிசார் வசம் ஒப்படைத்தேன். அதனை போலிசார் பெற்றுக்கொண்டு சென்று விட்டார்கள். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை( எதிரிகள் தரப்பில்)

நான் நகை அடகு கடை நடத்தவில்லை. நான் அடகு கடை நடத்துவதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நகை அடகு கடை நடத்த லைசென்ஸ் கிடையாது. ரவி என்னிடம் கட்டிட வேலை செய்வதில் பழக்கம். ரவியின் மூலம் எதிரி செல்வம் வந்ததால்தான் நான் பணம்கொடுத்தேன். போலிசார் விசாரணையில் அடிக்கடிசெல்வம் நகையை கொண்டு வந்து கொடுத்தால் அதனை நான் வாங்கி கொள்வேன் என்று சொல்லவில்லை. மேற்படி சம்பவத்திற்கு முன்பாக எதிரி செல்வத்திடம் நகை எதுவும் வாங்கிக்கொண்டு பணம் கொடுக்கவில்லை.நகையை பெற்ற பின்னர் செல்வத்தை போலிசாருடன் வந்தபோதுதான் பார்த்தேன். ரவி செல்வத்துடன் வந்து செல்வத்திற்கு பணம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்ட விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். ரூபாய் 80 ஆயிரம் என்பது ஒரு பெரிய தொகை என்பது சரிதான். பணம் கொடுத்த நேரம் ஞாபகமில்லை. அந்த தொகை கைவசம்இருந்ததா என்றால் சீட்டு எடுத்த பணம் என் வசம்இருந்தது. சீட்டு பணம் கையில் இருந்த விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. ரவி செல்வத்துடன் வந்து பணம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளதா பட்சத்தில் நான் செல்வத்திற்கு பணம் கொடுத்திருக்க மாட்டேன். ஒரு வாரத்திற்குள் பணத்தை திருப்பி கொடுத்து விடுவதாக சொல்லி பணம் வாங்கி சென்ற பின்னர் ஒரு வாரம் கழித்து ரவியை பார்த்து பணம் கொண்டு வரவில்லை என்று கேட்டீர்களா என்றால் அதன்பின்னர் ரவியை நான் பார்க்கவில்லை. ரவியை நகை வாங்கிய பின்னர் பார்க்காத சமயத்தில் நகை மீது சந்தேகம் எதுவும் வந்ததா என்றால் இல்லை. மேற்படி பணத்தை வேலை செய்யும் இடத்தில் வைத்து கொடுத்தேன். வீட்டில் வைத்து கொடுக்கவில்லை. நான் வேலை பார்க்கும் இடமும் குடியிருக்கும் இடமும் 500 அடி துூரத்தில் இருக்கிறது. எனது கடையில் வேலையாட்கள் யாரும் இல்லை. நகையை என்னிடம் போலிசார் வாங்கி சென்ற சமயத்தில் அங்கு வைத்து எடை போட்டு பார்க்கவில்லை. நகைகளின் அடையாளங்களை போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். பணம் வராத சூழ்நிலையில் நகையை விற்று பணமாக்கி கொள்ள முயற்சித்தீர்களா என்றால் இல்லை. போலிசார் நகையை என்னிடம்பெற்றுச் சென்றதற்கு ஆதரவாக கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. என்னால் சொல்லப்படுவது போல் எதிரி செல்வம் என்னிடம் வந்து நகையை வைத்து பணம் எதுவும் வாங்கி செல்லவில்லை என்றும் என்னால் சொல்லப்படும் நகைக்கும் செல்வத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் போலிசாரும் என்னிடமிருந்து நகை எதையும் பெற்றுச்செல்லவில்லை என்பது சரியல்ல. மேற்படி ரவி ஈரோடு ஒரு கொலை வழக்கில் சம்மந்தப்பட்டவர் என்றும் அவரை வைத்து இந்த வழக்கில் என்னை ஒரு சாட்சியாக உண்மைக்கு புறம்பாக

போலிசார் சேர்த்திருப்பதாக சொல்வது சரியல்ல. ரவி என்னிடம் கட்டிட வேலை செய்ததில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்பது சரியல்ல.

மறு விசாரணை.. இல்லை.

Sd/- Ambarish Sd/- III ADJ Salem.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.88/2015
Deposition of Witness for Prosecution PW- 11
Name :காளியப்பன்.
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 15th day of October 2019.

முதல் விசாரணை:-

நான் கன்னங்குறிச்சி காந்தி நகரில் குடியிருக்கிறேன். ஏர்டெல் கம்பெனியில் சேல்ஸ்மேனாக வேலை பார்க்கிறேன். 2013 ம் ஆண்டு ஒரு நாள் சேலம் புதிய பேருந்து நிலையத்தில் கூட்டமாக இருந்ததுபோய் பார்த்தேன். என்னுடன் சாரதி என்பவரும் வந்து பார்த்தார். அப்போது போலிசார் ஒருவரை வைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள் அவர் பெயர் வினோத் என்று சொன்னார்கள் அந்த சமயத்தில் மேற்படி வினோத் போலிசாரிடம் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதனை ஆய்வாளர் பதிவு செய்தார். இறந்த எதிரி வினோத் குமாரின் ஒப்புதல் வாக்கு்முலத்தில்முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் .சாட்சியின் அந்த கையெழுத்து மட்டும்அ.சா.ஆ 17. எதிரி வினோத் குமார் தனது ஒப்புதல் வாக்கு்முலத்தில் தன்னை அழைத்து சென்றால் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதடய பொருட்களை எடுத்து ஆஜர்படுத்துவதாக சொன்னதின்பேரில் போலிசார் மேற்படி எதிரியை சேலம் கன்னங்குறிச்சி ஜட்ஜ் ரோட்டிற்கு அழைத்து சென்றார்கள். அங்கு ஒரு மரத்துக்குஅடியில் இருந்து வினோத் குமார் ஒரு உருட்டு கட்டையை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் படுத்தினார். அதனை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் ஒரு மகஜரில் கைப்பற்றினார். உருட்டுக்கட்டைக்கான கைப்பற்றிய

மகஜர்தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அந்த மகஜர் அ.சா.ஆ 18. பின்னர் போலிசார் மேற்படி எதிரியை ஈரோட்டில் உள்ள அவரது வீட்டிற்கு அழைத்து சென்றுஅங்கு வைத்து



ஒரு வெள்ளை அரைஞான் , மற்றும் ஒரு தங்க செயின் ஆகியவற்றை எடுத்து ஆஜர்படுத்தினார். அவைகளை ஆய்வாளர் ஒரு மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரிலும் நானும் என்னுடன் வந்த சாரதியும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். மேற்படி நகைக்கான கைப்பற்றிய மகஜர் தான் என்னிடம் காட்டப்படுவதாகும்.அது அ.,சா.ஆ 19. பின்னர் நாங்கள் எங்கள் வீட்டிற்கு போய் விட்டோம். போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை( எதிரிகள் தரப்பில்)

எந்த எதிரி வாக்குமூலம்கொடுத்தார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்பது சரியல்ல. ஆய்வாளரிடம் எதிரி வினோத் குமார் ஜட்ஜ் ரோடு ஆலமரத்தடியிலிருந்து உருட்டு கட்டையை எடுத்து ஆஜர்படுத்தியதாக நான் சொல்லவில்லை என்பது சரியல்ல. எதிரியின் வீட்டிற்குள் நாங்கள் யாரும் போகவில்லை. அதில் எத்தனை பேர் குடியிருக்கிறார்கள் என்பது தெரியாது. அது யார் வீடு என்பதும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும்தெரியாது என்றும் எதிரி வினோத் குமார் என்னால் சொல்லப்படுவது போல்எந்த வித ஒப்புதல் வாக்கு்முலமும் கொடுக்கவில்லை என்றும் எந்தவித தடய பொருளையும் எடுத்து ஆஜர் படுத்தப்படவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் காவல் நிலையத்தில்வைத்து கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு அதனை அனுசரித்து பொய் சாட்சிமயளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Kaliyappan Sd/- III ADJ Salem.